IN THE COURT OF DISTRICT MUNSIF, T. VADIPATTI, MADURAI DISTRICT

| | | | | |
|---|---|---|---|---|
| | | O.S. No. | : | 31/2019 |
| | | P/W's | : | Pw2 |
| DEPOSITION OF WITNESS | | | : | |
| NAME | S. வைரமுத்துராமலிங்கம் | CASTE | : | |
| S/O | செருவலிங்க கோனார் | RELIGION | : | **இந்து** |
| VILLAGE | அய்யங்கோட்டை | CALLING | : | |
| TALUK | **வாடிப்பட்டி** | AGE | : | 70 |

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 07.03.2026**

**3, 4 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:**

1. எனது ஊரில் நான்கு வழிச்சாலை தென்வடலாக செல்கிறது. நான்கு வழிச்சாலைக்கு மேற்கு புறம் தாவா சொத்து உள்ளது. எனது டீ கடை பெயர் வைரமணி டீகடை, அதை தற்போதும் நடத்துகிறேன். நான் வாதியின் உறவினர். தாவா சொத்து மொத்தம் 8 செண்டு. தாவா சொத்தின் மொத்த பரப்பளவு எனக்குத் தெரியாது. தாவா சொத்தில் எவ்வளவு விஸ்தீரணம் ரோடு போடுவதற்கு எடுத்தார்கள் என்பது எனக்குத் தெரியாது. நான் பூர்வீகமாக 1902 லிருந்து எனது கிராமத்தில்தான் வசித்து வருகிறேன்.

2. தாவா சொத்தின் மொத்த விஸ்தீரணம் 20 செண்டு இருந்தது என்றாலும், அதில் 12 செண்டு சாலை போடுவதற்கு எடுத்துக்கொண்டு மீதம் 8 செண்டு உள்ளது என்ற விவரம் சரியாகத் தெரியாது என்றால் சரிதான். சாலை போடுவதற்கு நிலம் எடுத்ததற்கான இழப்பீட்டை யார் வாங்கினார்கள் என்பது எனக்குத் தெரியாது. வழக்கைப் பொறுத்து எதுவும் தெரியாமல் வாதிக்கு ஆதரவாக பொய்யாக சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல. தாவா சொத்தை ஒட்டி வீரம்மாள் காலியிடம், கோவில் உள்ளது என்றால் சரிதான். மேற்படி கோவிலை அனைத்து ஊர் மக்களும் வணங்குவார்கள்.

3. கோவிலை ஒட்டி ஊரணி இல்லை, குப்டை மேடுதான் உள்ளது. குப்பை மேட்டை சுத்தம் செய்ய அரசுக்கு மனு கொடுத்த விவரம் எனக்குத் தெரியாது. வா.சா.ஆ.1 பதிவு செய்யப்படாத ஆவணம், அதில் நான் கையெழுத்து செய்துள்ளேன். மேற்படி பத்திரத்தைப் பற்றி வாதியின் உறவினர் என்பதால் பொய்யாக சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல. வழக்குச் சொத்து வாதிகளுக்கு எவ்வாறு பூர்வீகமாக

பாத்தியப்பட்டது என்று எனக்குத் தெரியாது. 12.03.2018 ல் 95,000 ரூபாய் கிரையம் பேசி ரூ.70,000/- பெற்றுக்கொண்டதாக எனது விசாரணையில் சொல்லியிருப்பது உண்மை இல்லை என்று சொன்னால் சரியல்ல. மேற்படி தெரிவிக்கும் முன்னரே வாதி வசம் வழக்குச் சொத்தின் சுவாதீனம் ஒப்படைத்ததாக எனது வாக்குமூலத்தில் சொல்லியுள்ளதன் தேதி தெரியாது என்றால் சரிதான்.

4. கிரைய ஒப்பந்தத்திற்கு முன் 1, 2 பிரதிவாதிகள் கண்ணாமணியிடம் தரைவாடகை பெற்ற தேதி எனக்குத் தெரியாது என்றால் சரிதான். கண்ணாமணி தாவா சொத்தில் கடை வைக்கவில்லை என்றாலும் சாலையை ஒட்டிதான் வைத்துள்ளார் என்றாலும், தாவா சொத்தில் கடை வைத்துள்ளது போல் வாடகை ரசீதை ஏற்படுத்தி அதில் நான் கையெழுத்து செய்துள்ளேன் என்றால் சரியல்ல. முதலாவது கிரைய ஒப்பந்தம் போட்டுவிட்டு அதன்பின் மீண்டும் கிரைய ஒப்பந்தம் ஏற்படுத்தியதாக வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

5. 1, 2 பிரதிவாதிகள் 10 நாட்கள் கிரையம் செய்ய காலஅவகாசம் கேட்டதாக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. தாவா சொத்தை கிரைய ஒப்பந்தத்திற்கு முன்பே சுவாதீனத்தை ஒப்படைத்து உள்ளதாக சொல்லியுள்ளதால் 3, 4 பிரதிவாதிகள் அதில் பிரச்சினை செய்ய வாய்ப்பில்லை என்றால் சரியல்ல. தாவா சொத்தில் உள்ள ஊரணியில் ஊர் மக்கள் அனைவரும் சாமி கும்பிட்டு பரிகாரம் செய்வார்கள் என்றாலும், அதை நான் வாதிகளுக்கு சொந்தமானது என்று பொய்யாக சாட்சி சொல்கிறேன் என்றாலும் சரியல்ல.

6. 3 வது பிரதிவாதி அமுதன் எனது ஊரின் முன்னாள் வார்டு மெம்பர். நான் வாதிகளுக்கு ஆதரவாக பொய்யாக சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல.

சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டி அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

Sd/-
M.P. ராம்கிஷோர்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
வாடிப்பட்டி.
///TRUE COPY///